**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**O.S. No.340/2023**

**22025ஆம் வருடம் நவம்பர் மாதம் 03ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. கதிரேசன் (வா.சா.2) | தொழில் | : ஓட்டுனர் |
| த/பெ. | : திரு. குமாரசாமி | வயது | : 48 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : இந்திரா நகர், பழனி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 03.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>முதல் விசாரணை :-</u>**

**நான் இவ்வழக்கில் 3ம் நபர். எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. அதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் என் மீது வாரண்டு பிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டேன். நான் பழனி இந்திரா நகரில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் உள்ள சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். வாதி பாண்டி என்பவரை எனக்கு தெரியும். கடனுறுதிச் சீட்டை அதில் குறிப்பிடப்பட்ட சிவக்குமார் என்பவர் எழுதினாரா என்றால் சிவக்குமார் அன்று என்னுடன் வந்தார், அவர் கடனுறுதிச் சீட்டை எழுதினாரா என்பதை நான் பார்க்கவில்லை.**

**<u>குறுக்கு விசாரணை</u> :- வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.03 17:30:35 +0530

Additional Sub Judge,
Palani.